

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குத் தேர்வு செய்து தருமாறு, கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில், **'என் உயிரினும் மேலான..!'** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். ஆகஸ்ட் 17, 18, 24, 25 ஆகிய தேதிகளில் 36 மாவட்டங்களில் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. எஞ்சியுள்ள திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் புதுச்சேரி மாநிலத்திற்குமான பேச்சுப் போட்டி மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில், கீழ்க்காணும் நாட்களில் நடைபெறவிருக்கிறது, அதன் விவரம் வருமாறு :

### 26-08-2024, திங்கள்கிழமை

| வ. எண் | மாவட்டம், மாநிலம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | மேலிடப் பார்வையாளர் (மாநில துணைச் செயலாளர்) |
|---|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் | ஜி.எஸ்.நாயுடு மீட்டிங் ஹால், ரவுண்ட் சாலை, மென்டோன்சா காலனி, திண்டுக்கல்-3 | பொள்ளாச்சி உமாபதி, சிவ.ஜெயராஜ், மில்டன்<br>வே.மதிமாறன், புதுக்கோட்டை விஜயா, இந்திரகுமார் தேரடி | சி.ஆனந்தகுமார் |
| 2 | புதுச்சேரி | எம்.கே.எஸ்.ரோஸ்மா திருமண நிலையம், லால் பகதூர் சாஸ்திரி தெரு, பாண்டிச்சேரி-1 | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பத்மப்ரியா, கந்திலி கரிகாலன்<br>'புதுகை பூபாளம்' பிரகதீஸ்வரன், டி.அருள்எழிலன், ஆடுதுறை உத்திராபதி | க.பிரபு |

### 29-08-2024, வியாழக்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ஹோட்டல் பீமாஸ் வைஸ்ராய், பாரதி நகர், ராமேஸ்வரம் பிரதான சாலை, இராமநாதபுரம்-3 | முனைவர் சபாபதிமோகன், அமுதரசன், மருத்துவர் யாழினி<br>வே.மதிமாறன், உமா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ஜி.பி.ராஜா |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 25–08–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, முகாம் அலுவலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் "என் உயிரினும் மேலான...!" கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் இளைஞர் அணி நிர்வாகிகள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.



சென்னை, மெரினா கடற்கரையில், நேற்று (25.08.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம மெரினா நம்ம பெருமை என்ற விழிப்புணர்வு இயக்கத்தின் தொடக்க விழாவில், நீர்நிலைகளைத் தூர்வாரும் ரோபோடிக் இயந்திரங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கடற்கரை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் செயல்பாடுகளை தொடங்கிவைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்),திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), தா.இளையஅருணா (நகரமைப்பு), நியமனக் குழு உறுப்பினர்கள் இராஜா அன்பழகன், சொ.வேலு, மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, ஆக.26-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.08.2024 -திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முப்பெரும் விழா கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்க பயணத்தின் ஒரு பகுதியாக நடைபெறவுள்ள 'சிகாகோ அமெரிக்க தமிழர்களுடனான சந்திப்பு' நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்து அமெரிக்க தமிழ் சங்கங்களின் நிர்வாகிகள், பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் சிகாகோவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## இயற்கையின் எதிர்வினை; வயநாடு நிலச்சரிவு!

திருவனந்தபுரம், ஆக. 26-

கேரளாவில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதால் இத்தகைய பேரி டர்கள் ஏற்படுகின்றன என்றும் பேரிடர்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் கேரள அரசு கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்றும் கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் அம்மனுவை விசாரித்த நீதிபதிகள் ஏ.கே. ஜெயசங்கரன் நம்பியார், வி.எம். சியாம்கு மார் அடங்கிய அமர்வு கூறுகையில், "மனிதனின் அக்கறையின்மை மற்றும் பேராசைக்கு இயற்கையின் எதிர்வினைதான் வயநாடு நிலச்சரிவு. இயற்கை நீண்ட காலத்துக்கு முன்பே நமக்கு எச்சரிக்கை விடுத்தது. கேரள அரசு அதன் வளர்ச்சிக் கொள்கையை மறுபார்வை செய்ய வேண்டும். இயற்கை வளங்கள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல், காடுகள், கானுயிர் பாதுகாப்பு, இயற்கை பேரிடர் தடுப்பு, நிலையான வளர்ச்சி இலக்கு கள் சார்ந்து மாநில அரசு கொண்டுள்ள கொள்கைகளில் புதிய அணுகுமுறை தேவை. இதுபோன்ற இயற்கைப் பேரிடர் ஏற்படுவதைத் தடுக்க விரிவான கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டு உள்ளது.